**දුරකථන**/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, **Fax:** 2784846

ඊමේල්/ஈ–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

**අධ්‍යාපන අමාත්‍යාංශය**

**கல்வி அமைச்சு**

**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya". Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය / எமது இல / My No: **ED/03/55/03/3(1)**

முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date: 2011.12.12

சுற்று நிருப இல :-2011/33

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல பாடசாலை அதிபர்கள்,

## மீலாதுன் நபி (முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினம்) விழா – 2012

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் 'அறிவுடன் கூடிய சிறந்த ஒழுக்கமிக்க எதிர்கால சந்ததியினரை உருவாக்குதல்' என்ற எண்ணக்கருவுக்கு அமைய தேசிய கலாசார அடையாளங்களை பேணிப்பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டு நாட்டிலுள்ள முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்கின்ற ஏனைய பாடசாலைகளிலும் மீலாதுன் நபி விழாவினை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 8 ஆம் திகதி நாடளாவியரீதியில் சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் கல்விகற்கின்ற ஏனைய பாடசாலைகளிலும் பாடசாலை மட்டத்தில் மீலாதுன் நபி விழா நடாத்தப்படுதல் வேண்டும். இதன் மூலம் இஸ்லாமிய கலாசாரத்தைப் பேணிப்பாதுகாத்துக் கொள்ளவும், முஸ்லிம்களின் உள்ளங்களில் சமய அறிவினை வளர்த்துக் கொள்ளவும், சிறந்த மனப்பாங்கினை விருத்தி செய்யவும், ஏனைய இனத்தவர்களுடன் சகோதரத்துவம், ஐக்கியம் மற்றும் சௌஜன்யம் என்பவற்றின் மூலம் முன்மாதிரியாகவும், நல்லிணக்கத்துடனும் வாழ வழிப்படுத்துவதுமே இவ்வேலைத்திட்டத்தின் இலக்காகும்.

03. அதிபர்கள் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இது தொடர்பாக சகல ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்தி பாடசாலையில் மீலாதுன் நபி விழா நடாத்தப்படும் விதம் தொடர்பாக தீர்மானித்து அதற்கடுத்த தினம் (ஜனவரி மாதம் 11 ஆம் திகதி) பாடசாலையின் சகல மாணவ மாணவிகளுக்கும் அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ்வேலைத்திட்டமானது அதிக முக்கியத்துவம் கொடுத்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதுடன் பாடசாலை மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளிற்கு எவ்வித தடைகளும் ஏற்படாத வண்ணமும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். பாடசாலைகள் தமக்குப் பொருத்தமான நேரத்தைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்பதுடன் இதற்கு ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்பினையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். தேவையேற்படின் இவ்வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக பாடசாலையினுள் குழு ஒன்றினை நியமித்துக் கொள்ளுதல் வேண்டும்.

04. இவ் விழாவின் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1. மதகுருமார்களையும் ஏனைய சமயத்தவர்களையும் கனம் பண்ணுவதற்கு வழிகாட்டுதல்.
2. முஸ்லிம் மாணவர்கள் தங்களது தாய், தந்தை, சகோதரர்கள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் வயோதிபர்களிற்கு சலாம் (அஸ்ஸலாமு அலைக்கும்) கூறுவதற்கும் ஏனைய சமூகத்தவர்களை கனம் பண்ணுவதற்குமுரிய மனப்பாங்குகளை விருத்தி செய்தல்.
3. பாடசாலை மற்றும் வீட்டுச்சூழலை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதோடு பழமரங்கள் மற்றும் நிழல்தரும் மரங்களை நடுவதுடன் அவற்றைப் பராமரித்தல்.
4. நாள்தோறும் பாடசாலை ஆரம்பிக்கும் முன்னர் புனித அல்-குர்ஆன் வசனங்களை பாராயனம் செய்வதுடன் அதை மாணவர்கள் செவிமடுப்பதற்கும் வழிகாட்டுதல்.
5. பாடசாலை ஆரம்பிக்கும் போதும், பாடசாலை முடிவடையும் போதும் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீது சலவாத்து ஓதுதல் வேண்டும்.
6. காலை ஆராதனைகளின் போது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் முஹம்மத் நபி (ஸல்) மற்றும் குலபா உர் ராசிதூன்கள் (நன்மாராயம் கூறப்பட்ட 4 கலிபாக்கள்) சஹாபாக்கள், தாபியீன்கள், தபஉத்தாபியின் களது நற்குணங்களை எடுத்துரைத்தல்.
7. தரம் 1 – தரம் 9 வரையான மாணவர்களிற்கு நாள்தோறும் தமது நற்பழக்க வழக்கங்களைப் பதிவு செய்யும் முறையொன்றை ஆரம்பித்து வருட இறுதியில் சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்யும் நடைமுறையை செயற்படுத்தல்.
8. முஸ்லிம் பாடசாலை மாணவர்கள் அறபு, அறபு இலக்கியம் ஆகிய பாடங்களைக் கற்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும்.
9. பாடசாலைகளில் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், கவிதைகள், நாடகங்கள், கஸிதாக்கள், கட்டுரைகள், உரையாடல்கள், அறபு எழுத்தணிக்கலை, குழுவேலைகள், சிரமதானங்கள், கண்காட்சிகள் என்பவற்றிற்கு வழிகாட்டுதல் வேண்டும்.
10. மாணவர்கள் பாடசாலைகளின் நூலகங்களில் இஸ்லாமிய நூல்களை வாசிப்பதற்கு வழிகாட்டுதல்.
11. பாடசாலைகளிலுள்ள முஸ்லிம் மஜ்லிசை (மன்றம்) பிரபல்யமானதாக மாற்றியமைத்து அதன்மூலமாக மாணவர்கள் மத்தியில் வருடாந்த செயற்பாடுகளை முறையாக செயற்படுத்துவதற்கு வழிகாட்டுதல் வேண்டும்.

12. பள்ளிவாசல்களிற்கு தொழுகைக்காகச் செல்லும் சிறியவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை தூய்மையான, வெண்ணிறமான அல்லது மிகப்பொருத்தமான ஆடைகளை அணிந்து செல்வதற்கு வழிகாட்டுதல்.
13. வெள்ளிக்கிழமை தினங்களில் உரிய நேரத்திற்கு சகல முஸ்லிம் ஆண் மாணவர்களும், முஸ்லிம் ஆண் ஆசிரியர்களும் பள்ளிவாசலுக்குச் சென்று 'ஜும்ஆ' பிரசங்கத்தினை செவிமடுப்பதுடன் ஜும்ஆ கடமையையும் (ஜும்ஆ தொழுகை) நிறைவேற்றுதல்.
14. அஹதிய்யா இஸ்லாமிய பாடசாலைகளிற்கும் மற்றும் மாலைநேர குர்ஆன் பாடசாலைகளுக்கும் (மத்ரசாக்கள்) செல்லும் மாணவர்களை ஊக்குவிப்பதுடன் செல்லாத மாணவர்களின் பிரச்சினைகளைத் தேடியறிந்து தீர்வு பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.
15. முஸ்லிம்களின் வீடுகளில் இஸ்லாமியப் பின்னணியை உண்டாக்குவதுடன் இஸ்லாமிய பண்பாட்டு அம்சங்களைக் கடைப்பிடிப்பதற்கும் வழிகாட்டுதல் வேண்டும்.
16. சகல முஸ்லிம் வீடுகளிலும் சிறிய நூலகங்களை அமைத்து இஸ்லாமிய நூல்களை தேடிப் பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களிற்கும், பெற்றோர்களிற்கும் அறிவுரை வழங்குதல் வேண்டும்.
17. சகல உயிரினங்களிற்கும் அன்பும், கருணையும் காட்டுதல் வேண்டும்.

2012 ஆம் ஆண்டு ஒரே நாளில் தேசிய ரீதியில் மீலாதுன் நபி விழாவினை வெற்றிகரமாக நடாத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றேன்.

எச். எம். குணசேகர
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்

1. பரீட்சை ஆணையாளர் நாயகம் - பரீட்சைகள் திணைக்களம்
2. பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
3. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
4. பிரதம ஆணையாளர் – கல்விக் கல்லூரிகள் கிளை
5. பணிப்பாளர் - முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்
6. சகல பதவி நிலை உத்தியோகத்தர்கள் - கல்வி அமைச்சு